ஸ்ரீ ராமஜெயம்.
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
வீரப்பய்யனார் துணை.

அல்லிநகரம், வீரப்பய்யனார், அருட்காவடிச்சிந்து.

இஃது
பெரியகுளம் தாலூகா அல்லிநகரம் கிராமத்திலிருக்கும்,
வில்லாணி அய்யரென்ற இராஜப்பார்ட்.
மகா-ள-ள-ஸ்ரீ

S. வெங்கடசாமி பாகவதரவர்கள்

இயற்றப் பெற்று
ஷை கிராமம், பென்ஸன் மகா-ள-ள ஸ்ரீ
P. அங்கமநாயுடு அவர்கள் குமாரர்.
P. A. சுந்தரராஜ நாயுடு அவர்கள்
பொருளுதவியின் பேரில்,
தேனி, ஹக்கீம் பிரஸில்
சிப்பிக்கப் பெற்றது.

காபி 500 [அணா 2

3 JUL 193

998:38.2195 BL
M32.
171269

உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீமகேசாயா நுஜய

வீரப்பய்யனர் துணை

அல்லிநகரம், வீரப்பய்யனர்,

அருட்காவடிச்சிந்து.

இஃது

பெரியகுளம் தாலூகா அல்லிநகரம் கிராமத்திலிருக்கும்,
வில்லாணி அய்யரென்ற இராஜப்பார்ட்.

மகா-ள-ள-ஸ்ரீ

S. வெங்கடசாமி பாகவதரவர்கள்

இயற்றப் பெற்று

டை கிருமம், பென்ஸன் மகா-ள-ள ஸ்ரீ
P. அங்கமநாயுடு அவர்கள் குமாரர்.

P. A சுந்தரராஜ நாயுடு அவர்கள்

பொருளுதவியின் பேரில்,

தேனி, ஹக்கீம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] காபி 500 [அணா 2

13 JUL 193

அல்லிநகரம் பெருமாள்கோவில் பட்டர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

திருவேங்கிடசாமி அய்யரவர்களியற்றிய

சாற்றுக்கவி

அல்லிநகர்க் கருள்வளரும் வீரய்யன் சிந்துதனை
அகிலம்போற்ற
சொல்லிடு வெங்கடசாமி காவடி சிந்ததனை மன
துகந்து கேட்போர்க்
கெல்லையில்லா வமுதமிரு செவியதனிமடுத்ததென
இசைத் தணலின்பமுற்று
நல்கினனிச் சாற்றுப்பா திருவேங்கடக்கவிஞன்
நயம் பெற்றோங்க

அல்லிநகரம் ராமாயண பிரசங்க வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

அழகர்சாமி ஆச்சாரியவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி

தாமரைசூழ்வாவிதிகளல்லிநகர் வீரய்யன்
சரணமலர்க் கன்புகூர்ந்து
காமனைநேர் வடிவழகன் வைணவ வேங்கடசாமி
கவிஞன் சொல்லும்
நேமமுறும் சிந்ததனைக்கண்டு நாவாயிரமாய்
நேர்ந்தான் சேடன்
நாமகளுமகிள்ந் தனளுவிதன் பெருமை நமக்கெழிதோ
நவிலர்க்கம்மா

உ

வீரப்பய்யனார் துணை.

அல்லிநகரம் வீரப்பய்யனார்
அருட்காவடிச் சிந்து.

அருள் விருத்தம்.

திருவளரும் அல்லிநகராளு மெங்கள்
தேவன் வீரய்யனருள்ச் சிந்துபாட
கருணைமிகுங் கணபதிசோலய்யனாரும்
கருடவாகன வரதராஜன் கூட
பெருமைமிகும் அகமலைவாழ்குரு வீரய்யன்
பித்தனுக்குப் பிரவணஞ்சொல்வேலனாட
அருமைமிகும்வாசி மீதேரி வந்து
அன்புடனே வீரய்யா அருள் செய்வாயே (1)

நவமணியாலமைத்தொரு மகுடமின்ன
நாகரத்னம்போல திருத்திலகமின்ன
பவமானசொல்க்கேளாச் செவியின்மீது
பரிதிமதிபோலிரு குண்டலங்கள்மின்ன
புவிபுகழும்வரையை நிகர்புயத்தின்மீது
பொன்னினாபரண முளுதுமின்ன
அவசியமாய் வாசிமீதேரி வந்து
அன்புடனே வீரய்யா அருள்செய்வாயே (2)

மணிக்கரத்தே மாசில்லாக்கடைய மின்ன
வாகான மருங்கிலொட்டியாண மின்ன
இணையில்லாப்பாதமதில்ச் சிலம்புமின்ன
யேந்தலேப் பொன்துகிலுமிடையில் மின்ன
துணையான சோலய்யனார் பக்கமேவ
தொண்டரெல்லாங் கொண்டாடும் துதிதானேற்று
க்ஷணநேரம் தாமதமில்லாமாவேரி
தந்தையே வந்தருள்வாய்த் தரணிமீதே (3)

முப்பத்து முக்கோடி தேவர்சூழ
முனிவரொடு சித்தர்களென்னாளு வாழும்
ஒப்பில்லா அகமலைவாழப்பாவீரா
உந்தனையே தஞ்சமென்று உகந்தோமய்யா
எப்போதும் நிறைமருத நதியில் வாழும்
ஏந்தலே வீரய்யா இந்த வேளை
தப்பாது வரந்தரவே வாசியேரி
தந்தையே வந்தருள் செய் தரணிமீதே (4)

நாயகல

காவுகளும் கழனிசென்னல் சன்னலோங்கும்
கருணைமிகும் அல்லிநகர்க்கரசே வாவா
பூவுலகம்புகள்ந்தேற்றும் புண்யாவாவா
பொங்கிவரும் பணசல்நதியோனே வாவா
காவடிப்பாலுண்டவனேகண்யா வாவா
கருணைநிதி பெரிகிடுமா வள்ளலே வா வா
ஆவலுடன் எதிர்பார்த்தோமாமேல் வந்து
அன்புடனே வீரய்யா அருள்செய்வாயே (5)

அரிஅரனார் மகிள்ந்தளித்த அய்யா வாவா
அகமலைவாழ்ஜோதியே அருளே வாவா
பெருமைபெறும் அல்லிநகர்க்கரசே வாவா
பேருளாம் சோலய்யனார்க் கனுசா வாவா
கரிவரதராஜனாய் வந்த யெங்கள்
கண்ணபிரான் தோழனே யெம்மைக்காக்க
சரியானதருணமிது புாவியேரி
தந்தையே வந்தருள்செய் தாணிமீதே (6)

வேதமொரு நாலுந்தேடியுங்காணாத
வித்தகனே புத்தமுதே விண்ணோர் போற்றும்
சாதகனே முப்பத்திரெண்டு வாத்யம்
ஜம்ஜமன முளங்கிடவே மலையைவிட்டு
கீதங்கள் தும்புரு நாரதர்கள் பாட
கேசவனும் சோலய்யனும் அரிகில்கூட-
சோதியுள்ள வாசிமீதேரிவந்து
சுந்தரனே வீரய்யா துணை செய்வாயே (7)

ஆதியிலெங்களுக்கு வரம் கொடுத்தோ நீயே
அழகான அல்லிநகராள்வோ நீயே
சோதியுள்ள அகமலையில் வாள்வோ நீயே
தொண்டர்களுக்குதவும் தண்டமிழும் நீயே
பாதிமதி சூடிடுவோன் பாலன்னீயே
பரம்பரையெங்களைப் பாதுகார்ப்போன் நீயே
மாதவத்தோர் பணியுமெங்கள் வரதன் நீயே
வாசிமீதேரியே வந்தருள் செய்வாயே (8)

அரும்பொன்னே மணியேயெனன்பே வாவா
அமரர்துதி அகமலைவாளரசே வாவா
மருவிலா மரகதமாணிக்கமே வா வா
வயிரமே வைடூரியப் பவளமே வா வா

திருமகள் வீற்றிருக்கும் பங்கஜமே வாவா
செழுஞ்சுடரேகர்ப் பக்தினமுதே வாவா
வருமைநோய் யெங்களிட மணுகா வண்ணம்
வாசிமீதேரியே வந்தருள் செய்வாயே (9)

கற்பகத்தின் கீழமர் இந்திரன் குபேரன்
கண்ணிமையாத் தேவரொடு முனிவருந்தன்
சொற்படியேநடந்து தொண்டு புரிவாரய்யா
ஜோதியே அகமலைவாழ திருமூர்த்தி
நற்பயன் பெற்றிலங்கிடவே நாங்களுன்னை
நமஸ்க்கரித்தோம் வீரய்யா நன்மையான
மார்ப்புயனேக்கல்வி செல்வம் தழைத்தேயோங்க
வாசிமீதேரியே வந்தருள் செய்வாயே (10)

எந்தனுக்கு அன்னைபிதா குருவும் நீயே
இகபரங்களிரண்டிர்க்குப் பொருளும் நீயே
சந்ததமெங்களுக்கு குலதெய்வம் நீயே
தரணியோர்க்குதவும் நவநிதியும் நீயே
சுந்தரஞ்சேர் மநதநதி சோலைவாழும்
சுமுகனே அருளைறயிந்த வேலை
அந்தரத்தே நடம்பூரியும் பரியின்மீது
அன்புடனே யேரிவந்து அருள்செய்வாயே (11)

காலனைக்காலாலுதைத்தோன் மகனே வாவா
கருணைபிதும் பெங்களருட்க்கடலே வாவா
ஞாலமதிலென்னாளும் வளர்ந்தேயோங்கி
நலந்தருமாபனசல் நதியோனே வாவா
சீலமுள்ள அல்லிநகர்தன்னை யாளும்
செல்வமேயிக்கருணம் வாசியேரி
கோலமுள்ள திருவழகா யெங்களுக்கோ
குறைவில்லாச்செல்வமதை கொடுப்பாய் தேவே (12)

சிந்து.

இராகம் இந்துஸ்தான் செஞ்சுருட்டி—தாளம் ஏகம்.

தானத நந்தனா வீரய்யா தானத நந்தனா
தானத நந்தனா வீரய்யா தானத நந்தனா

செந்திரு மாலருளும் வீரய்யன் மேல் சிந்து தமிழ்பாட 1
தந்திமுக னான விநாயகன் றாள்பணிந் தேற்றுவனே

விந்தையுடன் மருத நதிவளர் வீரய்யன் மீதுசொல்லும்
செந்தமிழுக்குகந்த சரஸ்பதி தேவிதுணையாமே 2

கந்தமலர் சூடும் வீரய்யன்மேல் காவடிச் சிந்து சொல்ல
செந்தாமரைப் பதத்தான் வாதன் சேவடியே துணையே 3

கையிலொளி யிலங்க மார்பினில் சவுஸ் துபந் துலங்க
செய்பதிரு மாதுமகிழ் செக நீசன் பதந்துணையே 4

சுந்தரி மாரிகௌரி பகவதி தூய மனோன் மணியம்
தந்தைக்குப தேசம் ஓதி வைத்த ஷண்முகனும் துணையே 5

செங்கையில் செண்டிலங்கும் வீரய்யன் மேல் சிந்து கவி பாட
வெங்கல மாமுனியும் பெத்தாச்சி விநாயகனுந் துணையே 6

கன்னல் சென்னல் விளையும் களனிசூழ் கார்வனம் தன்னில் வளர்
அண்ணல் சோல மலை ஆய்யனா ரடிபணிந் தேற்றுவனே 7

ஆசு மதுர முதல் தமிழதை அன்புடனே தெரிந்த
நேசரடிபணிந்து சிந்து சொல்ல நேர்மைப தாமேனே 8

ஜீவந்தி கூட்ட திற்றூறு நீர் சேர்ந்து மகிழ்வது போல்
பாவ வினை யோட வீரய்யன் மேல் பண்ணிசை பாடுவோமே 9

மாமயிலாட வான்கோழி மகிழ்ந்து நின்றாடுதல் போல்
சேமங் கொடுத்துதவும் வீரய்ன் மேல் சிந்து கவி புனைவேன் 10

அண்டங் கடல் போலும் மதில் வள ரல்லிக் கொடி போலும்
மண்டலமே புகழும் அல்லிநகர் வாழ்கின்ற வீரய்யனே 11

பொங்கு நளவருட சிந்து சொன்ன ரங்கய்யனைப் பணிந்து
மங்களஞ் சேர் பிரபவ சித்திரை மாசம் முதல் தேதி 12

ஈசன் றிசி கேசன் மகிழ்ந்திடு மெங்கள் வீரய்யன் பதம்
ஆசையுடன் போற்ற காவடி கொண்டாடி வருவோமே 13

மாணிக்ககால் நிறுத்தி மத்தியில் வயிரவிட்டமைத்து
ஆணிபொன்னிழைத்து பவளத்தை அன்புடனே வளைத்து 14

இளையொன்றயிரமாய் விலைபெறும் இந்திரவர்னபட்டை
மலைமகள் பாலன் காவடிக்கிவாகுடனே யமைத்து 15

திக்கெங்கினும் சொலிக்கும் ரசகுண்டு சித்திரம் போலிலங்க
மிக்கப்புகழுடைய முத்துமாலை மேன்மையுடன் துலங்க 16

எம்பெருமான் சிரம்போல் காவடிக்கிசைத்த சிகரம்வைத்து
அம்புவியோர்புகழும் கோமேதகத்தாலே புருவமைத்தார் 17

பக்கங்களிலிரண்டு மரகத பாவைகளை நிறுத்தி
அக்கரையாய்ச்சரதில் புஷ்பராகத்தாலே கிளிதரித்தார் 18

மாமயில்களிரகு நாலுபுரம் மங்களமாய் நிறுத்தி
மாமகள்சேர் வரதவீரய்யன் மகிழ்ந்து விளையாட 19
பக்தரெல்லாம்கூடி சோலய்யனார் பாதம் பணிந்திடவே
அத்தனருள் பாலன்பரியின் மேலானந்தமாயேரி 20
காவடியோர்களுடன் வரதன் கழலிணையை பணிந்து
பூவுலகம்புகழும் அல்விநகர் புண்ணியமாக்களுடன் 21
அண்ணல்சோலய்யனருள் பெற்று வர ஆனந்தமாகவேதான்
நன்னயமாய்க்கூடி தெற்குமுகம் நாடி வருகையிலே
வேங்கலமாமுனியும் அய்பன்வரும் வேடிக்கையை பார்த்து
மங்களமாகவேதான் மலர்பதம் வந்து பணிந்திடவே 22
கோட்டைக்களம் கடந்து பாட்டைவழி கோலத்திருவழகன்
நாட்டிலுள்ளோர்புகழும் பெத்தாக்ஷி விநாகனைப்பணிந்தார் 23
பங்கயபுஷ்பத்துரை புங்கவனும் பாரளந்த கண்ணனும்
சங்கரனய்யநாரனும் வீரய்யனும் சந்தோஷமாய் கூடி 24
சாமளன்சோதரியா மாரியம்மன் சன்னதி முன்னே நின்று
பூமகள்வாள் தேனிநகர்வழும் புண்யர்களும் பார்த்தார் 25
வேண்டியவர்களுக்கு கர்பகம்போல் வேண்டியதை கொடுக்கும்
பாண்டிய நாட்டினிலே தேனிநகர் பாக்யம் நிறைந்ததுவே 26
அன்ன சத்திரங்களும் ராஜவீதியான கடைத்தெருவும்
நன்னயமான திருநகரையவர் நாகரிகம் பார்த்து 27
அங்குவந்துகூடும் காவடியை ஆனந்தமாயழைத்து
சங்கம் நிறை மதுரைரோட்டுவழி சந்தோஷமாய் நடந்தார் 28
சுருளிமா நதியும் கொட்டகுடி சேர்ந்த முல்லைநதியும்
மரிவிபோன்றாக பெருகியே வாரநதியோரம் 29
காவுகளனிகழும் நீரோடை தாவுகழும் சூழ்ந்து
மேவியசோலய்யனார் சன்னதிமுன் வீரய்யன்வந்துநின்றார் 30
சர்க்கரை பொங்களுடன் சம்பாவும் தத்யோதனமுடனே
முக்கனி பானக்கமும் பஞ்சாமிர்தமும்பாலிளநீரும் 31
பக்தியுடனுசானபிசேகம் பாங்குடனே முடித்து
எத்திசையோருக்கெல்லாம் பிரசாதம் இன்பமுடன் கொடுத்தா
சோலையனாரிடத்தே விடைபெற்று சுந்தரனுமகிழ்ந்து
ஞாலத்தவர்கூட தேனிமா நன்னகர் வீதிவந்தார் 33
காளி குலத்தவர்கள் வீரய்யன் கழலிணையை பணிந்து
பால்பழம் தேங்கனியும் அபிசேகம் பக்தியுடன் படைப்பார் 34
சத்திவுமையிடத்தே விடைபெற்று சந்தோஷமாகவேதான்
சித்திவிநாயகனை கண்டு தெரிசித்து நடத்திவந்தார் 35

இந்திரபுரி கடந்து வெஞ்சலாயிருக்குமிடம் கடந்து
அந்தரத்தோர் வளரும் அல்லிநகர்க்கானந்தமாக வந்தார் 36

நகர்வலம் புரிந்து காவடியோர் நடனங்களாடி
பகவதிபாலன் சன்னதியில் பண்புடனே சேர்ந்தார் 37

மெய்யன் வீரய்யனுக்கு அபிஷேகம் மேன்மையுடனடத்தி
துய்ய மனத்தோடு காவடியோர் தொழுது நின்றிடவே 38

காசி தனிஸ்கோடி ராமேஸ்பரம் கன்யா குமரியுடன்
மாசில்லாக் குற்றாலம் திருச்செந்தூர் மா பாவநாசமுடன் 39

சுருளி மாவுத்து சண்முக சொருப சிதம்பரமும்
திருமஞ்சள் நதியும் கூட்டாரு சேர்ந்த சடையாலும் 40

வேண்டிய தீர்த்தத்திற்கே பக்தரை விருப்பமுட னனுப்பி
பாண்டியரைக் கூட்டி அல்லியம் பதிதனிலே புகுந்து 41

ஆதியிற் கோபாலன் திருவிளை யாடல் புரிந்ததைப்போல்
வீதி வீதி நடந்து பக்தர்கட்கு வேண்டிய பால் சொரிந்தார் 42

சொற்பன ரூபமுமாய்ச் சாதுகட்கு சுய சொரூபமுமாய்
அற்புத மாகவேதான் வீரய்யன் அனைவர்க்கும் காக்ஷி தர 43

சந்திர காந்த கலசம் காவடியில் .சந்தோஷமா யேற்றி
சந்தனம் சாம்பிராணி தீர்த்தம் பால் சர்க்கரை கற்பூரம் 44

மச்சம் கொளுந்தாவம் சேவலும் மகாவி பூதியுடனே
இச்சை யெதுவெதுவோ காவடியி லேற்றியே தோழிவிட்டு 45

அண்டர் துயர் தீர்த்தோன் ஆளிதனி லானைக் தனைகாத்தோன்
கொண்டல் நிறமுடையோன் பக்தர்க்காய் கோவர்த்தனமெடுத்
பஞ்சவர்க்குத் தூதன் ஆயர்மனை பர்வைபர்க்கு நாதன் [தோன்
செஞ்சொல் மறைவேதன் பணிந்திடுஞ் செழு மலர்ப் பாதன் 47

சங்கு சக்ரக் கொடையான் வரதன் சர்வாபரணமுடையான்
எங்கும் புகழுடையான் அல்லிநக ரென்னுளும் வாழ்வுடையான்

சாமள மேனியனே வெங்கட சாமிக்குப காரனே
காமனை ஈன்றவனே வரதா காத்திடு மெங்களையே 49

என்றிரஞ்சிப் பணிந்து வரதனை யேற்றி மனமகிழ்ந்து
என்றும் அருள் குறையாச் சடகோபம் இன்பமுடன் புனைந்து

ரங்கதாசன் மரபில் வந்ததிரு வேங்கட தாசன் கையால்
மங்களமாகவே தான் அபிஷேக மாலை பரிவட்டமும் 51

பெற்றவுட னுசான் பூசாரிமேல் பேரருளோங்கிடவே
வெற்றிக் கொடி பூண்ட வீரய்யனை வேலாயுதா வெனவே 52

மட்டடங்கா வீரா பூசாரிமேல் வந்து விளையாடி
திட்டம தாகவேதான் பக்தர்களின் சிந்தை மகிழ்வுடனே 53

வேலுவே லென்று சொல்லி பூசாரியும் வேடிக்கையாய் நடந்து
ஞாலமுண்ட வரதன் சன்னதியை நாடி வலம் புரிந்தார் 54

பக்தசிகாமணிகள் காவடிக்குப் பால் கலசங்கள் கட்டி
சத்தி தெரியவென்று வரதன் சன்னதி முன்னே நின்று 55

செந்தில் வளர்பவனே வீரய்யா தேவர் புகழ்பவனே
சந்தத மெங்களுக்குச் செல்வங்களைத் தந்து ரக்ஷிப்பவனே 56

பழனியாண்டவனே வீரய்யா பரமனார் மகனே
மலைவளஞ் சிறந்த அல்லிநகர் வந்த பெருமானே 57

தேவர்களுக் கமுதே வீரய்யா சிந்தாத மாமணியே
மூவருக்கு முதலே யெங்களுக்கு முன்வர வேணுமய்யா 58

சலோக சமீப சாரூப சாயுட்சியமே மிகுந்த
பால தண்டாயுதனே யெங்களைக்கண் பார்த்திட வேணு மய்யா 59

யென்றென் றவர்கள் வேலாயுதா வென்று டணிந்திடவே
குன்றைக் குடைபிடித்த வரத கோவிந்தனு மெழுந்து 60

நவரத்ன மகுடம் சிரசினில் நளினமா யிலங்க
கவசங்கள் பூண்டு மகர கண்டியு மேலணிந்து 61

முத்துப் பதைக்கங்களும் மாலையும் முன்கைமு தாரிகளும்
எத்திசையும் சொலிக்க கவஸத்துவ மியல்புட னணிந்து 62

கையில் தோடா வணிந்து விரலில் கணையாழியு மணிந்து
மெய்யில் களபமுடன் மலர் மாலை மென்மேலு மணிந்து 63

பட்டு மடியணிந்து புயத்தில்ப் பஞ்ஞருசைய மணிந்து
சட்ட திட்ட மாக ஆயுத சாலைக்குள்ளே புகுந்து 64

சங்கு சக்ர கேதைவாள் கோதண்டமும் சந்தோஷமா யணிந்து
மங்கள மாகவேதான் வரதனும் வான் பரி மீது வந்தார் 65

சத்தி வேலை யெடுத்துக் கரத்தினில் சம்பிரமதாய்ப் பிடித்து
எத்திசையும் துதிக்க பரியின் மேலேந்த லாரோகணித்தர் 66

வீரய்யனை அழைத்து அனைவர்க்கு வேண்டிய காட்சி தந்து
ஆரபாரத்துடனே பரியின்மே லாரோ கணித்தனரே 67

ஜெய வரதனுடன் வீரய்யனும் சேர்ந்துமே முன்னடக்க
ஜெய ஜெயவெனவே ஜெயமுரசெங்கு முழங்கிடவே 68

பம்பை முளங்கிவர கொம்புடன் டல வாத்ய முளங்க
நம்பியுனைப் படித்த சிந்து கவி நான்மறைபோ லிலங்க 69

வேதங்களுக் குகந்த அந்தனர்கள் மேன்மையதாய் நிறைந்து
ஆதவன் போல் சிறந்த அல்லிநக ராண்டவனும் நடந்தார் 70

வானவ ரிந்திருதி முனிவர்கள் மகிழ்ந்து கொண்டாடும்
ஞானம் நிறைந்த அல்லி நகர் வளர் நான்மறை வேதியனே 71

கர்ப்பகத் தாருவைப் போல் 'வேண்டியதைக் காசினியோர்களிக்
அற்புதமே மிகுந்த அல்லிநக ராண்டிடும் வீரய்யனே [கும்

விண்ணுல கோர்களெல்லாம் அனுதினம் வேதத்தினுற்புகழும்
மண்ணுலக மகிழ்ந்த அல்லிநகர் வாழ்ந்திடும் வீரய்யனே 73

மாடிகளில் பதித்த அழகுகண் ணாடி வளி கதிரோன்
காடிவரு மான அல்லிநக ராழுமென் வீரய்யனே 74

பொன்னுல கமிதுவோ வெனப்புவி யோர்புகழ்ந்தேற்றுகின்ற
கன்னல்சூ ளல்லிநகர் வளர்கின்ற கருண்ய வீரய்யனே 75

மாடமேல் மாடங்களின் கொடிகள் மதியை யடுத்ததென
நாடெங்குமே புகழும் அல்லிநக ராழும் ராஜேஸ்பரனே 76

கேசவ நன்னகரோ அழகையோ கின்னரர் வாழ்பதியோ
ஈசனிருந்து வளர் கைலையோ இமையவர் நாடோ 77

அற்புதகர் களினால் கட்டிய அழகுயர் கோட்டைகளும்
பற்பல மாடிகள்சூ ளல்லிநகர் பாக்யம் நிறைபொருளே 78

ரம்பையோ மேனகையோ ஊர்வசி நங்கை திலோர்த்தமைபோல்
அம்பை நிகர்த்த விளி மாதர் வள ரல்லி நகர்க்கரசே 79

வாணி மயேஸ்பரியோ இந்திராணி மலர்மகள் போல
ஞான மாதர் வாழும் அல்லிநகர் ஞான வரோதயனே 80

மங்கையர்கள் வதனம் கண்டு வான்மதி நிலைதவறி
சங்கை தெரிந்தருளும் அல்லிகர் ஸ்தானிக வீரய்யனே 81

ஆடவர் மாதர்களும் இந்தவிதம் அன்புடனே பணிய
மாடம் நிறைந்த அல்லிநகர் வலம் வந்தருள் வீரப்பனே 82

மாங்கனி தேங்கனியும் பலாக்கனி வாழைக் கனியுடனே
பாங்குடன் வீதியினில் சூரையிட்டு பக்தர் பணிந்திடவே 83

பாதங்களில்ப் பணிந்து அடியர்க்குப் பாக்கியமும் கொடுத்து
ஜோதி மலர்மாலை தோழிலிட்டு தூயன் வழி நடந்தார் 84

நாரணப்பன் மகிழ்ந்து செய்து வைத்த நற்பெரு மண்டபமுன்
தோரணத்தின் கீழ் அய்யனும் துளபனும் வந்து நின்றார் 85

பாணக்கம் நீர் மோரும் பஞ்சாமிர்தம் பக்தியுடனெடுத்து
வேண மட்டும் கொடுத்தார் வருகின்ற மேதினியோருக்கெல்லாம்

காவடி பால்ச் சொரிய வீரய்யா காக்ஷி தருவாயென்று
சேவடி போற்றுவரை மகிழ்ந்து திருமுகம் பார்த்து வந்தார் 87

தேவர்க் கனுகூலன் தாமரையின் செழு மலர்க்கண்ணன்
பாவைக்கு லோலன் சமுத்ரம்வாழ் பால கோபாலன் 88

வேலவனும் பரிமேல் வருகிற வேடிக்கையைப் பார்த்து
நீலமேக ரூபன் என்னையனை நேர்மையுடனழைத்தார் 89

தீர்த்தத் துளபமுடன் வீரனுக்குத் திலதம் ஆர்த்தியிட்டு
கோர்த்த மலர் மாலை மார்பதனில் கோதி ஆசீர் வதித்தார் 90

பன்னிரு பத்துக் கஜ சங்கிலியைப் பாங்குடனே மாட்டி
வன்ன னெடுங்கரத்தில் தண்டாயுத வாளரிவாள் துலங்க 91

ஈட்டி வளதடியும் கருங்கச்சை யெங்கும் சொலித்திடவே
தாட்டிகமா யிடுப்பில் மணிகளை தரித்தெதிரில் வந்தார் 92

வந்து யென்னையனையே கருப்பன் மகிழ்வுடனே பணிந்து
தந்தையே சென்று வர கோடி லக்ஷம் சரணம் செய்தேனென்ற(ன்

நல்லதப்பா கருப்பா அகமலை நான்போய் வருமளவும்
எல்லையினில் காகம் பரவாமல் இன்னகரைக் கார்ப்பாய் 94

சாயந்திரம் வருவேன் உன்னிடத்தில் சந்தோஷ மாயிருக்க
தூயனே வேடிக்கை செய் யென்றுரைத்து சுந்தரனும் நடந்தார்

செங்கையில் செண்டுடையோன் வருவகை சீலனருள் பாலன்
மங்கை வல்லபையுடன் எதிர் கண்டு மகிழ்ந்தாசீர்வதித்தார் 96

மாங்கனிக்காய் வேலன் மயில் மீது மாநிலம் சுற்றி வர
ஓங்கிச் சிவனைச் சுற்றிக் கனி பெற்ற உண்மையைப்போலநின்றார்

நின்றக ணேசனையும் மலர்வகை நீடு நந்தவனமும்
கொன்றை வில்லி குமரன் கண்டு களி கூர்ந்துகொண்டேநடந்தார்

மாலும் சிவன் போலும் கூடியே மாநிலமே புரள
வேலு மயில் தரித்த வீரய்யனும் வேகமுடன் நடந்தார் 99

மீருசமுத்ரத்தையும் கழனியும் மேன்மையுடன் பார்த்து
கார்மேகம் போன்றதொரு பரியின் மேல் காருண்யனும் நடந்தார்

ரங்க சமுத்திரத்தின் கனுக்கையும் ரம்யமாகப் பார்த்து
பங்கமில்லா மருத நிலமீது பாங்குடனே நடந்தார் 101

அய்யன் நடக்கும் வழி தண்ணீர்ப் பந்த லங்கங்கு நீர் சொரிய
மெய்யன் பரி நடத்தி அனைவர்க்கும் மெய்யான காக்ஷிதந்தார்

ஆலவட்டங்கள் செண்டா சாமரம் அருகில் விசிரி வர
வாலையின் பாலகன் மேல் தேவர்பூ மலர் மழை பெய்தனரே 103

Q2998:38.2119SAL

காவடி முன்னடச் பாடி வரும் காளையர் பின்னடக்க
பாவைய ரெல்லோரும் என்னையனைப் பார்த்து நடந்து வந்தார்

பாங்குடனே கிருசி தொழில் செய்யும் பற்பல தோட்டங்களும்
ஓங்கி வளாந்து வரும் கோனேரியை உத்தமமாய்க் கடந்தார் 105

உச்சிக் கால வேளை அய்யன் பரி ஓங்கி நடப்பதனால்
லக்ஷம் கண்ணானாலும் பார்ப்பதற்கு லக்ஷணமே யாகும் 106

முகம் பவள நிறம் குதிரைக்கு முன்னங்கால் பச்சை நிறம்
உகமை சொன்னாலும் காதுரெண்டு ஒக்கு நீலோர்ப்பலமாம் 107

மேலோகார் மேக நிறம் அடி யெயர் மின்னொளி போன்ற நிறம்
வாலோபு வாலுயென்பார் பின்னங்கால் மாந்தளிர் போலாகும்

பஞ்ச லக்ஷணமென்பார் அய்யன் பரி பாடி நடக்குமென்பார்
கஞ்ச மலர் போல குளம்புகள் கருவமைந்த தென்பார்

நெத்தியில் வீர பட்டம் மாணிக்கத்தால் நேர்மையுடன் துலங்க
மத்தியில் புஷ்பராக வயிர மரகதப் பொட்டிலங்க 110

பொன் கொடியாலிழைத்த கடிவாளம் பூட்டி யிருபுரமும்
விண்கொடி போலாக அங்குபடி மேன்மையாத் தொங்க விட்டு

சீனியின் மீதிருந்த என்னையனைச் சேவித்திடுவ மென்று
வானவ மாதர்களும் முனிவரும் வந்து பணிந்திடுவர் 112

இந்த விதமாக முல்லை வழி ஏகி யேகி நடந்து
சுந்தர நாரணப்பன் செய்து வைத்த சோலையில் போய்ச்சேர்ந்தார்

வீரய்யனும் கூட மறையவன் வேதங்களும் கூட
மாரனழகுடையான் கெருடன் மேல் வரதனும் கூட 114

ஆனந்தமாக வரும் காவடிக ளாடி அருள் கூட
ஞானமது நிறைந்த அகமலை நாதனருள் கூட 115

முப்பத்து முக்கோடி தேவர்களும் முக்கியமாய் கூட
நார்ப்பத்தெண்ணாயிரம் பேரிசிகளும் நாதனிடம் கூட 116

சிரமம் தீர்வதற்கு நாரணப்பன் செய்த வுபசாரம்
அரமி தென்றுரைத்து வீரய்யனு மானந்தமானாரே 117

காவடி யோர்களுக்கும் பாடிவரும் காருண்ய மானவருக்கும்
மேவுமிளநீர்பால் நீர்மோரும் வேணமட்டும் கொடுத்தார் 118

தேவர்க்கமுதம் தாஜெகதீசன் சிந்தை மகிழ்ந்ததுபோல்
யாவருக்கும் தீர்த்தமுடன் பாணக்கமும் அன்புடனேகொடுத்தார்

அய்யன் மகிழ்ந்து பரியின் மேலானந்தமா யேரி
வையகத்தோர் மகிழ்ந்தே கூடி வர வரதனும் நடந்தார் 120

மாதிகனேடை வழி என்னையனும் சோதிப்பிர காசமதாய்
ஆதவன் போல் கடந்து அஞ்சு புளி பாதை வழி நடந்தார் 121
வீருசின்னு புளியை வீரய்யனும் வேகமதாய்க் கடந்து
மாரனைப் போல் வடிவம் பொருந்திய மாந்தருடன் நடந்தார் 122
முல்லை வளஞ் சிறந்த படுகையின் யெல்லைதனைத் தாண்டி
அல்லல் தீர்க்கும் பனசல் நதிக்கரை ஆண்டவனும் கடந்தார்
மானிலமே புகழும் வீரய்யன் மார்க்கண்டன் வாழ் படுகை
தேன்வளர் சோலை யென்றே யென்னையன் சிந்தை களிகூர்ந்தார்
தேவ மங்கைமார்கள் என்னையனின் சேவடியைத் துதிக்க
காவடிப் பாலுடையோன் கன்னியரைக் கண்டு மகிழ்ந்தனனே
தப்பாத சொல்லுடையோன் குப்பா பிள்ளைதான் வளர்த்தசோலை
முப்பாலும் முக்கனியும் தருமென்றே மூர்த்தி மனமகிழ்ந்து
எத்திசை யோர்களுடன் சோலையிலிருந்து களைப்பாரி
தத்தித்தோ மென்றாடும் பரியின்மேல் தாண்டவனு மேரி
தேங்கு பிலாமாவும் கொய்யாவும் தேனும் கசிந்துருகும்
மூங்கித் தோப்பினருகே சிவசுத முருகனும் நடந்தார்
வாழை பழுத்திருக்கும் வான்கரும்பு வானிலடித்திருக்கும்
தாழை மடல்களெல்லாம் அகமலைச் சார்பை வளைந்திருக்கும்
மாங்கனியைப் பரித்து மந்திகள மத்தளம் கொட்டிடுமாம்
பாங்குடனே மசங்கள் கசிந்து பாரில் பெருகிடுமாம்
அன்னங்களும் குயில்கள் மயிலும் அண்டாண்டப் பக்ஷியும்
தன்னினங்களுடனே ஒன்றாகச் சார்ந்து விளையாடுமாம்
கிள்ளைக் கூட்டங்களெல்லாம் ஒன்றேடொன்று கிட்டக்கிட்ட நெ
வள்ளலெனும் வீரா வாதா வாருங்களென்றிடுமாம் (ரிங்கி
தேக்கில் சந்தன ம மருதமும் தேவதாரி யாசும்
ஷோக்குடனே கூடி விண்ணுலகத் தோடே வளர்ந்திடுமாம்
மல்லிகை பிச்சி ரோஜா செவந்தி மாமருவு கொழுந்து
முல்லை பாரிஜாதம் வீரய்யனை ரெல்லை கமழ்கதிடுமாம்
வேணும் சாமான்களெல்லாம் வியாபாரிகள் விற்குமிடங்கடந்து
வேணுகோபாலன் வளர் சன்னதியைக் காணும்படி நடந்தார்
பாலகுருவப்பனும் முன்னுளில் பைம்பொன்னல் செய்துவைத்த
மாலதில் வீரய்யனும் வாதனும் வந்து மகிழ்ந்தனரே
நந்தனிடத்தை விட்டு வீரய்யனும் சொந்த இடந்தேடி
சந்தோஷமாகவேதான் மேற்குமுகம் தானே நடக்கலுற்றார்
மூங்கித் தோப்பைக் கடந்து அய்யன் பரி ஓங்கி விளையாடி
சாங்கோப சாங்கமதாய் மேற்கு முகம் சவ்வாரி செய்ததுவே
சந்தன மார்பளகன் என்னய்யன் சவ்வாரி செய்த பரி
அந்தரத்தி லேரி நடனங்க ளாடியே வந்திடுமாம்

சேமமது பெருகும் குதிரையைச் சிங்காரமாய்ப் பார்த்து
மாமகளென்னாளும் வளரும் வனவழியே நடந்தார்
மல்க்கர் மரத்தடியில் என்னய்யனும் சர்க்கரை தான் வளங்க
மிக்க மகமதியர் அல்லாவின் வேதங்களோதினரே
அய்யன் வரவு கண்டு கருப்பணன் அஞ்சலியாக நின்று
கையில் தடியோனும் என்னய்யனைக் காண வலங்கரித்தார்
கண்டைபுருமாலைச் சுந்துவிட்டுக் காதில் கடுக்கனிட்டு
மண்டலமே புகழும் மரகத மாலை மார்பினிலிட்டு
நெத்தியில் பொட்டுமிட்டு நீலவிழிக் கண்ணுக்கு மையுமிட்டு
சுத்தமுள்ள மார்பில் ஜவ்வாது ஷோக்குடனே யணிந்து
மீசை முறுக்கிவிட்டு அழகுள்ள மேல் முருகுமணிந்து
ஆசையதாய் விரலில்க் கணையாழி அழகுடனணிந்து
சல்லடங்கள் பூண்டு கருங்கச்சை தட்டி வரிந்து கட்டி
வல்லமையாகவே தான் என்னய்யனை வந்து பணிந்திடவே
வந்து பணிந்தவனை மலர்க் கரம் தந்து ஆசீர் வதித்து
எந்த நாளும் கருப்பா மங்களமா யிருவென்று நடந்தார்
மூவேழு பந்திகளில் வீற்றிருக்கும் மூர்த்திகளும் வணங்க
காவுகள் சூழ்ந்திருக்கும் கோவிலதைக் கண்டு மகிழ்ந்தனையே
மருத நதிக்கரையும் குருவீரன் வாழும் அகமலையும்
கருக்கேளாங்கி வளர் கோவிலுக்குள் சாமியும் வீற்றிருந்தார்
பழனியாண்டவனும் சோலய்யனும் பக்கத்து வீற்றிருக்க
மலைவளம் நிறைந்த மூங்கித்தோப்பில் வரதன் வீற்றிருந்தான்
காவடியோர்களெல்லாம் வரதன் கழலிணையைப் போற்றி
காவடியை யிறக்கிப் பனசல் கரைவழியே நடந்து
கோதாவரி கிருஷ்ண யமுனை கொல்லடம் காவிரி போல்
தீதகற்றும் பனசல் நதியென்று தீர்த்தங்களாடினரே
பஞ்சாச்சர மணிந்து காவடியைப் பார்த்து மனமகிழ்ந்து
கஞ்சமலர்ப் பாத வரதனைக் கருத்தினில் நினைந்து
முத்திரியை யெடுத்துத் தோழிலிட்டு சத்தி தெரியவே தான்
பக்தர்களெல்லோரும் வரதனைப் பாடிப் பணியலுற்றார்
கெருட வாகனனே வரந்தரக் கேசவனே வாவா
திருமகள் மார்பி லிலங்கிய தேவனே நீ வாவா
தேவர்களுக் கமுது தந்துதவும் தீன ரட்சகனே வா
மூவர் முதலே வர் மலர் மகள் மூர்த்தியே நீ வாவா
மாமுனிவாக்காக வேள்விதனை மங்களமாய்க் கார்த்தாய்
பூமகள் போலாக கல்லதனைப் பெண்ணுருவாக்கி வைத்தாய்
சீதை தனக்காக வில்லொடித்து திருமண முடித்து
வேதியன் வில்பரித்த ஜெயரொகு வேதனே நீவாவா

மாருதிக்கி மகிழ்ந்து சிரஞ்சீவி மாதவனே கொடுத்தாய்
கோரும் அடியவர்க்கே அருள்தர கோவிந்தனே வாவா
வெண்ணை பாலுண்டவனே பூதகி மேலே தவழ்ந்தவனே
மண்ணை யளந்தவனே வரதா வரமனமில்லையா

யாதவ மாதரெல்லாம் தீர்த்தங்க ளாடியவேளையிலே
மாதவனே துகிலை வாரிமர மீதிலொழித்தவனே
அஞ்சுலக்ஷ மனைவாழ் கோபியரோடஞ்சி விளையாடும்
கஞ்ச மலர்ப்பாதா வரதா காருண்யனே வாவா

இப்படி நீயிருந்தால் எங்கள் கலி எப்படித் தீருமையா
அப்பன் திருப்பதி வாழ் கோவிந்தா அருள்தர வாவா
என்று வருந்திடவே வரதனும் யேகமனதாகி
நன்றருள்களேற காவடியோர் நடனமாடினரே

ஆசானு முன்னடக்க பக்தர்களு மதன் பின்னே நடக்க
தாசர் சிந்து படிக்க சகலரும் சந்தோஷமாய் நடந்தார்
சேமம் பரி கடந்து மேற்குமுகம் சிங்காரமாய் நடந்து
பூமலர்ச் சோலை வழி வீரப்பனைப் போற்றிடவே நடந்தார்

நீதி தவறாத மல்கர்ஷா ஒதுவேதங் கேட்டு
பூதல மீது வளர் சோலை வழி புண்யனிடம் நடந்தார்
சத்திக் கிடாய்கள் வெட்டிக் கருப்பனைச் சந்ததமும் துதித்து
சத்தி பெருகவென்று காவடியைச் சன்னதி முன்னே விட்டார்

காவடியில் சேர்த்த தீர்த்தம் பால் சால மழைபோலே
புவிலுள்ளோர் மகிழ காக்ஷிகள் பொங்கி வளர்ந்ததுவே
தொண்டரெல்லாம் கூட வேலாயுதா வென்று துதிபாட
மண்டலங் கொண்டாட சன்னதி வலம் வந்து நின்றாட

ஆடிய காவடியை சன்னதிமுன் ஆனந்தமா யிரக்கி
ஜோடி ஜோடியாக கலசத்தை சுவாமி முன்னே கொடுத்தார்
ஆசா னபிஷேகம் சுவாமிக்கி அல் ...னே கொடுக்க
ஈசாவென் பிரார்த்தனையை யேற்றிக் கொள் ளென்று துதித்திடு

சந்தனம் கற்பூரம் சாம்பிராணி சர்க்கரை தாம்பூலம் (வார்
வந்த ஜனங்களெல்லாம் அபிஷேக மாகப் படைத்திடுவார்
மலை வளகைளெல்லாம் அன்னங்கள் வகை வகையாய்ச் சமைத்து
மலைமகள் பாலன் மகிழ்ந்திட வந்தவருக் களிப்பார்

சோடச பூஜையெல்லாம் வீரப்பன் சுத்தமதா யேற்று
நாடெங்குமே மகிழ சகலர்க்கும் நல்ல வரம் கொடுத்தார்
பால குருவப்பனும் வரதராஜன் பாதங்களைப் பணிந்து
ஞாலம் புகழ்ந்திடவே அன்னதானம் ஞானமுடனே செய்தார்

அந்தண ரெல்லோரும் ததியா ராதனைகள் புரிந்து
சந்தோஷ மாகவேதான் வரதனைச் சந்ததமும் பணிந்தார

சத்திரிய ராஜாங்கம் மனுமுறை தான் வழுவாதபடி
கர்த்தன் மன மகிழ மணியக்கள் காருண்யமாகச் செய்தார்
வைசிய குணவர்கள் வியாபாரம் வாஞ்சையுட னடத்தி
வையகத்தோர் மகிழ கனி வகை வாரி வாரிக் கொடுத்தார்
சுந்தராஜ மூர்த்தி இந்த யிடம் தோன்றினதி [illegible]
எந்த நாளும் பூர்த்தி யாகவே யிருந்திடுவார் கோத்தி
ஈரொம்பது படியை காத்திடும் எங்கள் கருப்பணனும்
பாரெங்குமே புகழ எங்களைக்கண் பார்த்து ரட்சித்திடுவார்
மாலைப் பொழுது வர வீரய்யன் மகிழ்ந்து பரியேறி
கோலத்திருவழகன் வரதனும் கூடித் திரும்பினரே
மூங்கித் தோப்பைக் கடந்து கன்னியர்கள் முன்னே நதி கடந்து
பாங்காய்ப் படுகை விட்டு அஞ்சு புளி பாதை வழி நடந்தார்
மாதிக ளோடை வழி நாரணப்பன் மண்டபமும் கடந்து
ஜோதியுள்ள வீரன் கருப்பன் தோப்பினில் வந்திருந்தார்
மாதர் மக்களுடனே நாதனிடம் வந்த ஜனங்களெல்லாம்
பூதலமே புகழும் கருப்பணன் பொன்னடி போற்றிடவே
வீரன் வரதனுமே திருக்கண்ணில் வீற்றிருந்த வுடனே
தாரணியோர்க ளெல்லாம் சாஷ்டாங்கச் சரணஞ் செய்தனரே
வாண வேடிக்கைகளும் மத்தாப்பு வர்ண அவுட்டுகளும்
ஞான மிகுந்திலங்கும் நாடகம் நன்மையுடன் பார்த்தார்
மாதர் கும்மி யடிப்பும் சிலப்பத்தால் வாலிபர்கள் நடிப்பும்
தேகமுயர் படிப்பும் என்னய்யன் நேர்மையுடன் பார்த்தார்
விண்ணுலகம் போன்ற அல்லிநகர் வீதி வலம் புரிந்து
மன்னவர் யாவருக்கும் நல்வரம் மகிழ்வுடனே யளித்தார்
ஆறுதலத்துடனே வீரய்யனுக்க கானஸ்தலமான
பேரும் சிறந்தோங்கும் அல்லிநக ரூரில் மகிழ்ந்திருந்தார்
சந்ததமும் போற்றும் வெங்கட சாமி தமிழேற்றும்
செந்திரு மாமகள் சேர் வரதனும் சிந்தை மகிழ்ந்திருந்தார்
விக்கினத்தை யகற்றும் ஐங்கர விநாயகனும் வாழி
முக்கண்ணனும் வாழி அகமலை முத்தர்களும் வாழி
வீரய்யனார் வாழி அகமலை மேலவனும் வாழி
கார்நிற மேனியனும் செங்கமலக் கண்ணபிரான் வாழி
சுந்தராஜன் வாழி கருப்பண சுவாமியுந் தான் வாழி
சுந்தரி மாரி கௌரி பகவதி தூய்ய பதம் வாழி
சோலய்யனார் வாழி குருவீர சுவாமியுந்தான் வாழி
ஞாலம் புகழ்ந் தேற்றும் அல்லிநகர் ஸ்தானிகரும் வாழி
சிந்துகவி வாழி அகமலை தேவநதி வாழி
சந்ததமும் துதிக்கும் வெங்கடசாமி தாசன் வாழி

முற்றுப் பெற்றது 1932

ஹக்கீம்

அச்சியந்திரசாலை,

தேனி S.I.R